எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஜி. நாராயணன், பொது நிறுவனங்கள் குழுத் தலைவர்.

திரு. பி.ஜி. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பன்மொழிப் புலமை பெற்ற ஒப்பற்றத் தலைவியாகவும், உலகத் தமிழர்களின் உண்மைப் பாதுகாவலராகவும், அடித்தட்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் இலட்சியமும் கொண்ட சக்தி வாய்ந்த தலைவியாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) ஏழையெளிய மக்களின் விடிவெள்ளியாகவும் விளங்குகிற, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்கி, கீழ்க்காணும் அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 159 முதல் 170 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

(ஆ) அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ.கே. போஸ், அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.

திரு. ஏ.கே. போஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியத் திருநாட்டின் வாழும் மனித தெய்வமே! தமிழகத்தின் ஒளிவிளக்கே! தரணி போற்றும் மகா சக்தியே! (மேசையைத் தட்டும் ஒலி) துணிவின் சிகரமே! எழுச்சிபெற்ற வீரமே! ஏழையெளியோரின் பொற்காலமே! கோடி தொண்டர்கள் வந்து குவியும் சரணாலயமே! தெய்வத்தின் தெய்வமே! (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வாழ வைக்கும் குடும்ப குலதெய்வமே! மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகிறேன்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2013-2014 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 115 முதல் 126 வரையிலான 12 அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.